கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 1/2019

நாள்.22.07.2025

வா.சா.2 – சுப்பம்மாள்
க/பெ – ஆறுமுகநாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1) இந்த வழக்கின் வாதி மயில் ராஜன் எனது மகன் ஆவார். எனது கணவரின் பெயர் ஆறுமுகநாடார் ஆவார். எங்கள் இருவருக்கும் வீட்டில் வைத்து திருமணம் நடந்தது. திருமணம் நடந்ததற்கான ஆதாரம் மற்றும் புகைப்படம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. எங்கள் திருமணத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் ராமையா தேவர், பால் நாடார் ஆகியோர் கலந்து கொண்டனர். இருவருமே தற்போது உயிருடன் இல்லை. ஆறுமுகநாடார் எனது கணவர் என்று சொல்லுவதற்கு ஆதாரம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை, எனது மகன் தான் உள்ளார். ஆறுமுகநாடாருக்கு ஏற்கனவே திருமணமாகி அமிர்தகனி என்ற மனைவி இருந்தார் என்றால் சரிதான். ஆறுமுகநாடாருக்கும், அமிர்தகனிக்கு அன்பரசி என்ற மகள் உள்ளார் என்றால் சரிதான்.

2) ஆறுமுகநாடார் என்னை திருமணம் செய்து கொண்ட காலத்திலேயே அமிர்தகனி என்ற மனைவி உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது மகன் எப்போது திருமணம் செய்தார் என்றால் திருமணம் நடந்து 25 வருடங்கள் இருக்கும். எனது மகன் திருமணத்திற்கு புகைபடம், வீடியோ எடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது மகன் திருமணத்தில் உள்ள புகைபடம், வீடியோவில் ஆறுமுகநாடார் உள்ளாரா



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.07.21 22:15:18 +0530

என்றால் அவர் திருமனத்திற்கு வராததால் அந்த புகைபடத்தில், வீடியோவில் அவர் இல்லை. அவர் மகன் திருமணத்திற்கு ஆறுமுகநாடார் ஏன் வரவில்லை என்றால் அவர் குடும்பத்தார் அவரை தடுத்துவிட்டனர். நானும், ஆறுமுகநாடாரும் ஒரே இனத்தை சார்ந்தவர்களா என்றால் இல்லை. நான் எந்த இனத்தை சார்ந்தவர் என்றால் தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்தவர் என்றால் சரிதான்.(சாட்சியானவர் தயங்கி தயங்கி பதில் கூறுகிறார்) ஆறுமுகநாடார் நாடார் இனத்தை சார்ந்தவர். எனது மகன் சபரி மலைக்கு கட்டு கட்டும்போது எனது கணவர் ஆறுமுகநாடார் வந்திருந்தார் என்று முதல் சாட்சியத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது புகைபடம் ஏதும் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. ஆறுமுகநாடார் மற்றும் அமிர்கனிக்கு செந்தில் மற்றும் ஜெகன் இரண்டு மகன்கள் உள்ளார்கள் என்றால் சரிதான்.

3) நான் ஆறுமுகநாடாரின் இரண்டாம் மனைவி என்று நிரூபிக்க போதுமான சாட்சியம் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி ஆறுமுகநாடார் மற்றும் எனக்கு பிறந்த மகன் என்று நிரூபிக்க போதுமான ஆவணம் இல்லை, அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.07.21 22:15:25 +0530